நம்மிடம் இருந்து வெல்லம், சர்க்கரை வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதனால் இவற்றை ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்காரிடம் இருந்து அனுமதியைப் பெறுவார்களா ?

(விடை இல்லை)

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனம்.

* 203. வினு.—திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமான விடை * சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அப்படிப்பட்ட உத்தரவுதான் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : கௌரவ நீதிபதிகளுக்குக் கூடுதலான அதிகாரம் தந்து மதுவிலக்கு போன்ற வழக்குகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடு முழுவதும் கிராம நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கொள்கை 1950 பஞ்சாயத்துச் சட்டத்தில் இருந்தது. 1958 சட்டத்தில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. பழைய வில்லேஜ் கோர்ட் ஆக்ட் இருக்கிறது. இப்போது கிராம நீதி மன்றங்கள் பணியாற்றவில்லை. ஆகவே இதற்கு கௌரவ நீதிபதிகளை நியமித்து தனிச் சட்டமே செய்யலாமா என்பது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

நீர்ப்பாசனத்துறையிலிருந்து காணமற்போன நிலப் படங்கள்

* 204. வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத் தலைமை அலுவலகத்திலிருந்து Restricted Maps காணமல் போனது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 4]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

Mercury lamps along Mount Road

205 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the entire Mount Road and upto the Parry's Corner would be lit up by powerful mercury vapour lamps; and

(b) if so, at what cost?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ரூ. 19.5 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும்.

Thiru K. VINAYAKAM : Whereas mercury vapour bulbs are found to be very satisfactory, will the Government take steps to light all the main streets in the City of Madras at the expense of the Government instead of depending upon the Corporation of Madras?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரின் எல்லையில் இருந்து மவுண்ட் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஈவினிங் பஜார், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் நெடுஞ் சாலை ஆகிய சாலைகளின் வழியாகப் பாரி முனை வரை ரூ. 19.5 லட்சம் செலவில் தெருவிளக்கை, மேம்படுத்த செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்கள். ஏற்கெனவே ரூ. 13.5 லட்சம் தரப்பட்டு மர்மலாங் பாலத்தில் இருந்து மவுண்ட் சாலை மேம்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. அதைப்பாரி முனை வரை நீட்டிக்க மேற் கொண்டுரூ. 6 லட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

புதுக்கோட்டையில் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி.

*206 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட் டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் கூட் டுறவுத் துறைக்கான பணிகளைப் புரிவதற்குரிய பயிற்சிப் பள்ளியை அமைத்துத் தரும் கருத்து அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : கூட்டுறவு முறையின் வளர்ச்சி குறித்து மாவட்டந்தோறும் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை அமைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில் இனிமேலாவது அத்தகைய ஒரு பள்ளியை அமைக்க யோசிப்பார்களா ?